
04

வருட சந்தா ரூ. 3 Rgd No. M. 2194



# மாத்வமித்ரன்.

DIGITIZED

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| Vol. 4 | ப்ரஜோத்பத்தி ஸம்வத்ஸரம் | No 7 |
|---|---|---|
| | மாக மாஸம் | |
| புஸ்தகம் 4 | பௌர்ணமி (22—2—32) | ந 7 |





பொருளடக்கம்.



| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 193 |
| 2. | ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 201 |
| 3 | காடகோபநிஷத். | 205 |
| 4. | ஆசாரமாலை. | 207 |
| 5. | மணிமஞ்சரி (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) | 209 |
| | ...புரை. | 213 |
| | ...திரட்டு | 218 |



72
22/2/32 211, N26
N32.4.7
208690

ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்.

20 டவுன்ஹால் ரோடு, மதுரை.

R. ரகூத்தமராவ் மானேஜர்

---

ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் மாத்வமித்திரன்

ஸ்ரீவியாஸ விலாசம், கும்பகோணம்.

---

தந்தி விலாசம்:—கிரேயான்ஸ். 1922ல் ஸ்தாபிதம்.

சென்னைக் கவர்னர் பாராட்டிய தொழிற்சாலை எது?

நேஷனல் கிரேயான் ஒர்க்ஸ்

கும்பகோணம்.

இதில் பாடசாலைகளுக்குவேண்டிய பலவர்ண சாக்கட்டிகள். பிலியார்டு சாக்பீஸ்கள், சாக்கட்டியில் பிளாட்டிங் பேப்பர் வெயிட்டுகள், பென்ராக்குகள், இந்து ஆலய விக்ரகங்கள் முதலியவை வெகு அபூர்வமாகத்தயாரிக்கப்படுகின்றன. மெடல்களும் ஸர்ட்டிபிகேட்டுகளும்பெற்றது, கவர்மெண்டாரால் ஆதரிக்கப்பெற்றது

எங்கள்தொழிற்சாலையில் நவராத்திரியைஉத்தேசித்து ஸ்பெஷலாக ஸ்ரீகணேசர், ஸ்ரீஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸரஸ்வதி முதலிய பிம்பங்கள் அழகாய் தயாரிலிருக்கின்றன. விபரம் மானேஜருக்குஒரு அணா தபால் பில்லை அனுப்பி தெரிந்து கொள்ளவும். விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

9 MAR 1932

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரெங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(பன்னிரண்டாவது அத்தியாயம்.)

(காபி ரைட்)

(முன் தொடர்ச்சி.)

நந்தகோபனுடன் வந்திருந்த யசோதை அன்றையதினமே யமுனையின் கரையில் துர்க்காதேவியை பிரஸவித்தாள். பிறகு தான் வஸுதேவன் அங்கு வந்து யசோதையின் சயனத்தில் ஸ்ரீகிருஷ்ணனைப் படுக்கவைத்துவிட்டு துர்க்கையை எடுத்துக்கொண்டு தன்னுடைய கிருஹத்திற்குச் சென்றான். நந்தகோபன் யமுனையின் கரையிலேயே வசித்துவந்தான். ஒருமாத காலம் நந்தகோபன் யசோதையின் ப்ரஸவஸ்தலமாகிய யமுனையின் கரையிலேயே வாசம்செய்து கம்ஸனைக்காண மதுராபட்டணம் சென்றான். பிறகு கம்ஸனுக்கு கிஸ்தியை செலுத்தினான். அச்சமயம் நந்தகோபனை வஸுதேவன் கண்டு இவ்வாறு பேசினான். குழந்தைகளுள்ள இடத்தில் அபசகுனங்களாகின்றன. நீ அங்கு சீக்கிரம் செல் என்று வஸுதேவன் சொல்லவும் நந்தகோபன் சீக்கிரமே யமுனாதீரத்திற்குச் சென்றான். அன்றிரவே நந்தகோபன் புறப்பட்டுப் போகும் சமயம் நந்தகோபன் அங்கு வந்து சேருவதற்குமுன்னடி கம்ஸனை வளர்த்த தாதியான

5690

பூதனை என்னும் ராக்ஷஸி மாயா வித்தையால் தன்னுடைய சுயரூபமான ராக்ஷஸ ரூபத்தை மறைத்துக்கொண்டு அழகுவாய்ந்த ரூபமுள்ளவளாய் பிருஹத்வனத்தின் பிராந்தியத்தில் மதுரை யின் ரஸ்தாவில் போடப்பட்டிருந்த நந்தகோபனின் கூடாரத்தை இரவில் பிரவேசித்தாள். யமுனையின் கரையில் போடப்பட்டிருந்த அந்த கூடாரத்தில் படுத்திருந்த பாலனான கிருஷ்ணனை பூதனை அங்கு நித்ரை செய்துகொண்டிருந்த யசோதையால் அவள் சரியான ஸாதுஸ்திரீ என்று கருதப்பட்டவளாய் கையில் வாரி எடுத்துக்கொண்டாள். பூதனையின் மாயையாலும் நித்ரையாலும் பரவசமாகி யசோதை குழந்தையை பூதனை எடுத்துக்கொள்வதைத் தடுக்கவில்லை. ஸமர்த்தனும் துஷ்டஜன மர்த்தகனும் ப்ரபுவுமான ஸ்ரீகிருஷ்ணனை பூதன் தந்த அவளுடைய ஸ்தனத்தை அவளுடைய பஞ்சப்ராணத்துடன் வெகு சீக்கிரமே பானம் செய்தான். உடனே பூதனை பிராணனைவிட்டு மிகவும் பயங்கரமான சரீரத்துடன் அந்த எல்லா வனப்ரதேசங்களையும் வியாபித்துக்கொண்டு விழுந்தாள். அச்சமயம்தான் நந்தகோபன் மதுரையிலிருந்து வந்து சேர்ந்தான். அந்த பூதனையின் சரீரத்தைக்கண்டு கோபாலகர்களெல்லாம் ஆச்சரியமடைந்தனர். தாடகையின் அம்சம் பெற்றவளும் ஊர்வசியின் ப்ரவேசமடைந்தவளுமான பூதனை தன்னுடைய ஸ்தனத்திலுள்ள காளகூடவிஷத்தால் கிருஷ்ணனை கொல்ல விரும்பினளாதலால் தமஸ்ஸை அடைந்தாள். அந்த பூதனையின் சரீரத்தில் பிரவேசம் செய்த ஊர்வசி ஸ்ரீகிருஷ்ணன் ஸ்தனபானம் செய்த மாத்திரத்தாலேயே சாபநிவிர்த்தியடைந்தவளாய் அக்ஷணமே ஸ்வர்க்கத்தை அடைந்தாள். ஊர்வசி குபேரனிடம் சுகிக்கவேண்டியநாளில் தும்புரு கந்தர்வனுடன் சங்கமம் செய்ததால் குபேரன் சாபங் கொடுக்க அதனால் அவள் பூதனையின் தேகத்தை ப்ரவேசம் செய்தாள். ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்பரிசத்தால் பரிசுத்தமான ஸ்வபாவமுள்ளவளாய் மீண்டும் ஸ்வர்க்கத்தையடைந்தாள். ரமாபதியான ஸ்ரீ ஹரி மகிழ்ந்தாரென்றால் கிடைக்காத புருஷார்த்தம் யாது உண்டு.

---



## சகடாக்ஷாஸுர வதம்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு நான்காவது மாஸம் நடைபெறும்பொழுது ஸ்ரீகிருஷ்ணனை அவனுடைய தாய்மாமன் வீட்டிற்கு அழைத்துப்போய் சடங்கு நடந்தது. அந்த தினத்தில் ப்ராத:காலத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் ஜன்ம நக்ஷத்திரமான ரோகிணி நக்ஷத்திரம் சிறிது பாகமிருந்தது. ஆதலால் அன்று மகோற்சவமே கொண்டாடப்பட்டது. அன்று ஓர் பெரிய வண்டியின் கீழ் படுக்க வைக்கப்பட்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன் அந்த வண்டியில் நுழைந்திருந்த சகடாக்ஷாஸுரனை கொல்லவேண்டி அந்த வண்டியை காலால் உதைத்தார். மகா பாபியான அந்த தைத்யன் ஸ்ரீகிருஷ்ணனுக்கு விரோதம் செய்யவேதான் அந்த வண்டியில் பிரவேசம் செய்து வண்டியின் ரூபத்துடனிருந்தான். அந்த சகடாக்ஷாஸுரன் ஸ்ரீகிருஷ்ணனால் காலால் உதைக்கப்பட்டவனாய் கீழே விழுந்தான். ரஸங்கள் நிறைந்த சொக்கள் முதலான சாமான்களுடனுள்ள பெரியவண்டி ஸ்ரீகிருஷ்ணனின் பாதப்ராஹாரத்தால் கீழே விழுந்தது. உள்ளேயிருந்த சகடாக்ஷாஸுரன் கைகால்கள் முறிந்து பிராணனை விட்டான். வண்டியின் சக்கரம் அச்சு இவைகள் முறிந்து மாறிவிழுந்தன. அச்சமயம் யசோதை யமுனையின் கரைக்குப் போயிருந்தாள். அங்கு நந்தகோபன் அவளை அதட்ட அவள் வீட்டுக்கு ஓடிவந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு கிருகபாதை யாது ஏற்பட்டதோவென பிராம்மண சிரேஷ்டர்களின் மந்திரங்களால் ஆதாணையுடன் அபிஷேகம் செய்துவைத்தாள். க்ரீடாதிகுண விசிஷ்டனான ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸனுடைய வேலையாளான சகடாக்ஷாஸுரனை பாதப்ரஹாரத்தால் ஸம்ஹாரம் செய்து சிறு குழந்தைபோல் மறுபடியும் படுத்தார் இவ்வாறு எல்லோரையும் சிக்ஷிக்கக்கூடிய ஸ்ரீகிருஷ்ணன் பாலகர்களின் விளையாட்டு விநோதத்தால் கோபாலர்களை சந்தோஷப்படுத்திக்கொண்டு கோகுலத்தில் வாசம் செய்தார்.

## அர்ஜுனனுடைய ஜனனம்.

அக்ஞானி ஜனங்களின் ப்ரத்யக்ஷத்தின்படி ஸ்ரீ கிருஷ்ணன் விருத்தியையடையும் ஸமயம் சதசிருங்கபர்வதத்தில் வாசம் செய்துவந்த பாண்டுராஜன் குந்திதேவியைப்பார்த்து மீண்டும் இவ்வாறு சொன்னான். எமக்கு தர்மிஷ்டனான குமாரன் முதலில் பிறந்தான். ஞானபலம் பாஹுபலம் இவைகளில் சிரேஷ்டனான இரண்டாவது மகனும் பிறகு பிறந்தான். ஒருவனே அதிபந்த பலமுள்ளவனாயிருந்தானாகில் அவனுக்கு சத்ருக்களுடன் யுத்தம் நேரிடும் சமயம் மற்ற சத்ருக்கள் ஜியேஷ்ட குமாரனுடைய சொந்த பட்டணத்தை திருட்டுத்தனமாய் அபகரிப்பார்கள். ஆகவே சத்ருக்களுடன் யுத்தம் செய்யவும் அவனுடைய நகரத்தை சம்ரக்ஷிக்கவும் பலிஷ்டர்களான இரண்டு மக்கள் இருக்கவேண்டியதாகும். எமக்கு பீமசேனனைத்தவிர வேறு சஸ்திர அஸ்திரங்களை அறிந்தவனும் வீரியவானுமாகிய மகன் பிறக்கவேண்டும். ஆகையால் குந்திதேவியே பலிஷ்டனான புத்திரனைக் கொடுக்கத்தகும் தேவதையை அழைப்பாய். ஆதிசேஷன் உன்னுடைய தமயனான வஸுதேவனின் மகனாய்ப் பிறந்திருக்கிறார். ஆகையால் அவர் உனக்கு மகனைத்தர அருகமாகார். மகனைத்தரத்தகும் கருடபகவான் மனுஷ்யர்களில் பிறப்பதில்லை. நாராயணன் கருடபகவானை மனுஷ்யர்களில் பிறக்க வேண்டாமென ஆக்ஞாபித்திருக்கிறார். கோபத்தை விளைவிக்கும் தமோகுணத்திற்கு அபிமானியானதால் பரமசிவன் அரசாள அருகனன்று. ஆகையால் ஆதிசேஷன் கருடன் ருத்திரன் இவர்களுக்கு தாரதம்மிய கிரமத்தில் நெருங்கியவனான மகேந்திரன் பலம் ஞானம் பக்தி இவைகளுடன் கூடியவன். ஆதலால் இந்திரன் அழைக்கத்தகுந்தவனே ஆவான். இவ்வாறு பாண்டுராஜன் சொல்லவும் குந்திதேவி சீக்கிரமே இந்திரனை மந்திரத்தாலழைத்தாள். பிறகு இந்திரன் தனுடைய ஆவேசம் விஷ்ணுவின் ஆவேசம் இவைகளுடன் சுயம் அர்ஜுனனென்று பலிஷ்டனாயும் அஸ்திரக்ஞனாயும் பிறந்தான்.



அப்பொழுது பாண்டுராஜன் ரூபவானான மற்றொருமகன் பிறக்க வேண்டுமென்று குந்திதேவியைப்பார்த்துச் சொல்லவும் குந்தி மகாகாரியத்தை உத்தேசித்தல்லாது பரபுருஷ ஸம்பந்தம் செய்வது அனர்த்தத்தை விளைவிக்குமென்னும் தர்மசாஸ்திரவிதியை அனுசரித்து இனி பரபுருஷ ஸம்பந்தம் செய்யமாட்டேனென்று பாண்டுராஜனிடம் சொல்லிவிட்டாள்.

பகவானுடைய பாதஸேவார்த்தமாக முன்பு எந்த பிரகஸ்பதி ஆசாரியாள் பீஷ்மாசாரியார் கிருபாசாரியார் இவர்களின் உற்பத்திகாலத்தில் த்ரோணாசாரியாராகப் பிறந்தாரோ அந்த பிரஹஸ்பதி ஆசாரியாரே உபகவனென்னும் யாதவசிரேஷ்டனால் வாயுபகவானின் ஆவேசத்துடன் ஞானியாக அவதாரம் செய்தார். நான் த்ரோணாசாரியாரென்ற ரூபத்துடன் பிராம்மணனாய்ப் பிறப்பெடுப்பதன்நிமித்தம் ஸ்ரீ ஹரியான கிருஷ்ணன் என்னை நெருங்கிய சேவகனாய்ச் செய்துகொள்ளமாட்டாரென்று அபிப்பிராயப்பட்டு ஸ்ரீகிருஷ்ணருக்கு அவருடைய யோக்யதானுகுணமாய் ஸம்பூர்ணமான ஸேவைசெய்யும் நிமித்தம் அவர் உத்தவனென்னும் ரூபத்துடன் யாதவர்களில் மீண்டும் அவதாரம் செய்தார். பிரஹஸ்பதி ஆசாரியாளிடமிருந்தே அந்த உத்தவன் ஸகல வித்தைகளையும் அப்யஸித்தான். உத்தவன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மந்திரியானான். மகாசமர்த்தனாய் ஸர்வக்ஞனானான். உத்தவன் பிறந்து மூன்றுவருடமானபின் ஸாத்யகி பிறந்தான். ஸாத்யகி பிறந்ததினத்தன்று சேகிதானனென்னும் யாதவன் பிறந்தான். பகவத் ஸேவார்த்தமாய் ப்ரவஹனென்னும் மருத்து யாதவர்களில் சேகிதானனெனப் பிறந்தான். சேகிதானன் பிறந்தநாளில் தான் ஹிருதிகனென்னும் யாதவனுக்கு கிருதவர்மனென்னும் மகன் பிறந்தான். கிருதவர்மன் பிறந்து மூன்று வருடமானபின் தான் யுதிஷ்டிரன் பிறந்தது. யுதிஷ்டிரன் பிறந்து ஒருவருடமானபின் ஸ்ரீ ஹரிக்கு பூபாரத்தைத்தொலைப்பதில் அங்கபூதனாக பரமசிவன் அவதாரம் செய்தார். மகாத்மாவான ருத்திர பகவான் பிறக்கும்போது குதிரையைப்போல் கனைத்ததால் அவர் அசுவத்தாமாவென பெயர்

பெற்றார். அந்த அசுவத்தாமாசாரியார் துரோணாசாரியாரின் வீரியத்தால் கிருபாசாரியாரின் தங்கையான கிருபீதேவியிடம் ஸர்வக்ஞராயும் பலிஷ்டராயும் அஸ்திரக்ஞராயும் பிறந்தார். அசுவத்தாமாசாரியார் பிறந்த நான்காவது நாள் துரியோதனன் பிறந்தான். துரியோதனன் பிறந்த மறுநாள் அதிதீரரான பீமசேனர் பிறந்தார். பீமசேனருக்கு இரண்டாவது மாஸம் முடியும்பொழுது ரோகிணி தேவியிடம் பூர்வம் ராமாவதார காலத்தில் ஸ்ரீராமசேவையைச்செய்தது போதுமென்றெண்ணங்கொள்ளாமல் வருத்தமடைந்திருந்த லக்ஷ்மணர் ஸ்ரீகிருஷ்ணன் பிறப்பதற்குமுன் பலிஷ்டராய் பக்திமுதலிய குணபூர்ணராய் ஸர்வக்ஞராய் பலராமரென்று அவதாரம் செய்தார். தேவகியின் எட்டு குழந்தைகளையும் கொல்வதற்காக தோஷமற்றவர்களான தேவகி வஸுதேவன் இவர்களை கம்ஸன் ஒரே இடத்தில் வைத்து காவில் எப்போது விலங்கிட்டானோ அச்சமயம் கம்ஸன் வஸுதேவனின் இதர பத்னிமார்களை வஸுதேவனிடம் சேர்ந்திராமல் விடுவித்து வந்தான். தேவகியின் கர்பத்தில் ஜனித்த குழந்தைகள் இன்னது இன்னதுதானென்று நிச்சயமேற்படுவதற்காக அந்த பாபபுத்தியுள்ள கம்ஸன் வஸுதேவனுடைய இதர பத்னிமார்களை அவர்கள் கர்பம் தரிக்கும்வரை வஸுதேவனிடம் விட்டிருந்து கர்பத்தின் லக்ஷணம் வெளியானவுடன் வஸுதேவனிடமிருந்து பிரித்து அவர்கள் பிரஸவிக்கும்வரை வெளியூர்களில் வைத்திருந்தான். இந்த காரணத்தைக் கொண்டு ரோகிணிதேவியை நந்தகோபனின் வீட்டில் அவளுடைய ப்ரஸவத்திற்காக கம்ஸன் விட்டிருந்தான். ரோகிணி தேவி பூர்ண சந்திரன்போல் ஸுந்தரமான முகமுள்ளவனும் சுக்ல வர்ணமுள்ளவனுமான பலராமனென்னும் மகனை கோகுலத்தில் ஈன்றெடுத்தாள். பலராமருக்கு மூன்றுமாதமானபின் ஜனனமற்றவரான ஸ்ரீகிருஷ்ணர் ப்ராதுர்பவித்தார். தேவகி வசுதேவன் இவர்கள் ஸ்ரீஹரியும் ஆதிசேஷனும் மக்களாய்ப் பிறக்கவேண்டுமென தவம் செய்தனர். விஷ்ணுவின் ஆவேசம் படைத்தவனும் பலிஷ்டனும் குணத்தில் சிறந்தவனுமான மகன் தனக்கு பிறக்கவேண்டுமென ரோகிணிதேவி தவம் செய்



தாள். ஆகையால் ஆதிசேஷன் பகவானுடைய சுக்லகேசம் கொண்டவராய் தேவகிதேவி ரோகிணிதேவி இருவர்களிடமிருந்தும் பிறந்தனர். ஸ்ரீஹரியின் சுக்லகேசத்தின் விசேஷமான ஆவேசம்படைத்தவரான ரோகிணி குமாரராகிய பலராமர் கோகுலத்தில் வளர்ந்தார். ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன் சேர்ந்து மனோஹரமான விளையாட்டுகளை ஆடிக்காண்பித்து கோகுலத்திலிருந்தவர்களை ஸந்தோஷப்படுத்தினர்.

## த்ரிணாவர்த்தாஸுர ஸம்ஹாரம்.

ஈசனான ஸ்ரீகிருஷ்ணனை சாமானிய குழந்தையென்று எண்ணியிருந்த தன் தாயான யசோதைக்கு ஸ்ரீகிருஷ்ணன் தான் ஹரியென்பதை அறிவித்துக்கொடுப்பதற்காக ஒரு சமயம் அவர் கொட்டாவி விடும்பொழுது அவருடைய வாயில் சகல ஜகத்தையும் தாயான யசோதைக்குக்காட்டினார். யசோதை அம்மாள் ஸ்ரீகிருஷ்ணனுடைய வாயில் மகத்தத்வம், அகங்கார தத்வம், பிரகிருதி, இதர பூதங்கள், சிவனுடன்கூடிய தேவர்கள் மனுஷ்யர்கள் தைத்யஸமூகங்கள் இவைகளுடன் கூடியதாய் ஆவரணயுக்தமாய் பிரம்மாவிலிருந்தும் உண்டானதான பிரம்மாண்டத்தையே கண்டாள். இதைக்கண்டு மிகவும் பயந்தவளாய் யசோதை தன்னுடைய இருகண்களையும் மூடிக்கொண்டாள். பிறகு லக்ஷ்மீநாயகனான ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய சொரூபத்தை மறைத்துவிட்டார். அவருடைய சரீரம் ஞானானந்தஸ்வரூபமென்றும், வியாப்தமென்றும் ஸாதுஜனங்களுக்கு அறிவிப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய அப்ராகிருத ரூபத்தை யசோதைக்குக்காட்டினார்.

ஸ்ரீகிருஷ்ணனை ஒருசமயம் யசோதை தன் தொடையின் மீது வைத்துக்கொண்டு சீராட்டிக்கொண்டிருக்கையில் ஸ்ரீகிருஷ்ணன் வெகுவாய் கனக்க அந்த அதிபாரத்தைத் தாங்கமுடியாமல் சங்கடப்பட்டு ஸ்ரீகிருஷ்ணனை உட்கார்த்திவைத்துக்கொள்ள முடியவில்லை; மெதுவாய் ஸ்ரீகிருஷ்ணனை கீழே தரையில் உட்

கார்த்திவைத்துவிட்டு யசோதை தன்னுடைய வீட்டுக்காரியத்தைக்கவனிக்க புறப்பட்டுப்போனாள். அச்சமயம் அதிக்ரூரனான ஓர் அஸுரன் அங்கு வந்தான். அவனுடைய பெயர் த்ரிணாவர்த்தன். அவன் கம்ஸனுடைய கிங்கரன்; அவன் அதிக்ரூரமான சுழல்காற்றை உண்டாக்கி சிசுவான அந்த கிருஷ்ணனை எடுத்துக்கொண்டு ஆகாயத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் திருணாவர்த்தாஸுரனுடைய கழுத்தை இருகைகளால் நெரித்து அவனை மூச்சுத்திணரும்படிசெய்து கொன்றார். மலையைப்போல் பெருத்த சரீரமுள்ள த்ரிணாவர்த்தனஸுரன் ஸ்ரீ கிருஷ்ணரால் கொல்லப்பட்டவனாய் பாராங்கல்லின்மீது ஆகாயத்திலிருந்து விழுந்தான். அவனுடைய சரீரம் தூள்தூளாய்ப்போக அதைப்பார்த்துவிட்டு பிருஹத்வனத்திலுள்ளவர்கள் மிகவும் ஆச்சரியத்தை அடைந்தனர்.

ஸ்வரூப பூதமானதும் தோஷமற்றதுமான ஆனந்தத்திற்கு ஸமுத்ரம்போன்றவரும் பிரம்மா சிவன் இவர்களுக்கு ஸ்வாமியுமான ஸ்ரீகிருஷ்ணர் தன்னிடம் கோபிக்காதவர்களிடம் விசேஷமாய் அனுக்ரஹம் செய்யவும் கோபிப்பவர்கள் அவரவர்களின் யோக்யதைக்கு அதிகமாய் செய்த புண்யத்தைக்குறைக்கவும் பகவான் வெண்ணை முதலியவைகளை கோபிகளின் வீட்டில் திருடிக்கொண்டு கோகுலத்தில் சஞ்சரித்தார்.

## மாத்ரீமக்கள் ஜனனம்.

எந்த வருடம் பாத்ரபதமாஸத்தில் பிரஹஸ்பதியும் சூரியனும் ஸிம்ஹராசியிலிருந்த சமயம் ஸர்வோத்தமனான ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்தாரோ அந்த வருஷம் பால்குணமாஸத்தில் அர்ஜுனன் பிறந்தான். அதன்பின் சைத்ரமாஸத்தில் மாத்ரீ தேவி பாண்டுராஜனைப்பார்த்துச் சொன்னாள். தங்களுக்கு குந்திதேவியிடம் சிரேஷ்டர்களான மூன்றுகுமாரர்கள் பிறந்திருக்கின்றனர். நானொருவள் மக்களில்லாதவளாய் இருக்கின்றேன். நான் தங்களருளால் புத்ரவதியாய் ஆகவேண்டும். (தொடரும்.)



## ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி)

208690

ஸ்ரீபாதராஜர் தம்முடைய யோகசக்தியால் அந்த பிரம்மஹத்தை தோஷத்தை நிவர்த்தி செய்து நரஸிம்மராஜன் ஆச்சரியப்படும்படி தனது மகிமையைக் காட்டினார். நரஸிம்மராஜன் மிகவும் மகிழ்ந்து ஸ்ரீபாதராஜரை தன்னுடைய ஸிம்ஹாஸனத்தில் உட்கார்த்திவைத்து மிகுந்த மரியாதைகளைச்செய்தான். ஆகவே ஸ்ரீபாதராஜர் நரஸிம்மபூபதிக்கு ஆப்த நண்பரானார். நரஸிம்ஹபூபதிக்கு அப்போதைக்கப்போது தர்மோபதேசங்களைச் செய்து நெறிதவராதிருக்கும்படி செய்ய ஸ்ரீ வியாஸராஜரை அனுப்பினார். நரஸிம்ஹபூபதி ஸ்ரீவியாஸராஜரிடம் இந்த விருத்தாந்தங்களை எல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லி தெய்வாதீனமாய் அர்ச்சகர்களின் சந்ததி ஓர் சிசு இருக்கிறதென்றும் அது சரியானவயதை அடைந்து பூஜையை ஒப்புக்கொள்ளுகிறவரையில் வியாஸராஜர்தான் ஸ்ரீ வெங்கடேசனை அர்ச்சிக்கவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தான். ஸ்ரீ வியாஸராஜரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார். தந்திரசாரவிதிப்படி திருமலை ஸ்ரீனிவாஸனை பன்னிரண்டு வருஷகாலம் பூஜித்து வந்தார். வெளியூருக்குப்போக நேர்ந்தால் வியாஸராஜர் தம் உத்தம சீடர்களைக்கொண்டு ஸ்ரீவெங்கடேசனின் பூஜையை சரிவர நடத்தி வந்தார்.

## ஸ்ரீரங்கனாதருக்குச்செய்த கைங்கரியம்.

நரஸிம்ஹபூபதி தனது ராஜ்யத்தில் தர்மத்தை ஸ்தாபிக்கும் கருத்துடன் தேசசஞ்சாரம் செய்யும்பொழுது மகாமேதாவியான வியாஸராஜரை கூடவே அழைத்துப்போய்க் கொண்டிருந்தான். வியாஸராஜர் ஸ்ரீரங்கத்திற்கு வந்த ஸந்தர்பத்தில் அவருடன் சைவமதத்திய பல பண்டிதர்கள் வாதம் செய்தனர். அவர்களின் வீர்தத்தை எல்லாம் கண்டித்து விஷ்ணுதான் ஸர்வோத்தமரென்பதை வியாஸராஜர் ஸ்தாபித்தார். இதை சைவசமயத்தார்கள் பொறுக்காமல் ஸ்ரீரங்கநாதரை தரிசிக்க வியாஸராஜர் சகல விபவங்களுடன் புறப்பட்டு வருகையில் கோபுரக்கதவுகளை மூடித்தடுத்துவிட்டனர். காரணம் கேட்டதற்கு அது சைவர்களின் ஸ்தலமென்றும் வைஷ்ணவாளுக்கு விஷ்ணுவை தரிசிக்க வழிகொடுக்க முடியா

தென்றுமறிவித்தனர். இவ்வாறே சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் அடிக்கடி பல தகராருகள் ஏற்படுவதாய் தெரியவந்தது. உடனே வியாஸராஜர் சைவ வைஷ்ணவ சமயத்தார்களில் பிரமுகர்களாயிருப்பவர்களை எல்லாம் வரவழைத்து பலபுத்திவாதங்களைக்கூறி ஜம்புகேசுவரத்தின் எல்லை எதுவரை என்பதை நிர்தாரணம் செய்துகொண்டு அதன்படி இருகக்ஷியினரும் நடந்துவர வேண்டுமென்றும் இல்லையேல் சக்ரவர்த்தி இதில் தலையிடவேண்டி வருமென்பதை அறிவித்தார். ராஜாங்கத்தில் வியாஸராஜருக்கிருந்த செல்வாக்கை அறிந்த இருகக்ஷியினரும் வியாஸராஜரின் அமுதமொழிகளாலும் ஞானபக்தி வைராக்யாதி உத்தம குணங்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டவர்களாய் "ஸ்வாமி! தாங்கள் தான் இதற்கோர் ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டும். நாம் அவ்வாறே நடந்துகொள்ள சித்தமாயிருக்கிறோ" மென்றறிவித்தனர். அப்பொழுது வியாஸராஜர் சைவர்களே! நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் வைஷ்ணவ எல்லையிலிருந்து நானே மூச்சுப்பிடித்துக்கொண்டு உங்கள் எல்லையில் ஓடுகின்றேன்; எந்த இடத்தில் நான் மூச்சுவிடநேருமோ அந்த இடம் வரை நீங்கள் வைஷ்ணவர்களுக்கு விட்டுக்கொடுத்து விடவேண்டும்; அதுவரை ஸ்ரீரங்கத்தின் ஒருவர் எல்லையாகும்; மீர்ந்த இடம் ஜம்புகேசுவரத்தின் எல்லையாகு" மென்றார். எவ்வளவு தூரந்தான் மூச்சுபிடித்துக்கொண்டு ஓடமுடியும்? எமக்குத்தான் அதிகமாய் ஸ்தலம் லாபமடையுமென்று சைவர்களெண்ணி அந்த ஏற்பாட்டுக்கு தமது முழு ஸம்மதியையும் கொடுத்தனர். ஸ்ரீவியாஸராஜருக்கு அச்சமயம் சுமார் 30,32 வயதிருக்கும். ப்ராணாயாமாதியோகங்களை தினம் அப்பியஸித்து சுவாசநிரோதம் செய்யும் பழக்கம் பெற்றவராயிருந்தாராதலால் ரங்கரங்க ரங்கரங்கவென்று வெகுநேரம் மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே வெகுதூரம் ஓடினார். இவ்வாறு ஸ்ரீரங்கநாதரின் உற்சவாதிகளுக்குப் போதுமானதாய் விசாலமான ஸ்தலத்தை வைஷ்ணவர்களுக்கு ஸம்பாதித்துக்கொடுத்தார். சைவர்களின் தண்டா ஏற்படாதிருக்கும்படி ராஜாங்க வியவஸ்தைகளையும் செய்து கொடுத்தார். பிறகு ஸ்ரீரங்கநாதனை தரிசித்து தாம் செய்த கைங்கர்யத்தை பகவானிடம் ஸமர்ப்பணம் செய்து சஞ்சாரம் புறப்பட்டார்.

## உடுப்பிக்குச்சென்றது.

சஞ்சாரக்ரமத்தில் நரஸிம்ஹபூபதி மேற்கு கடற்கரையோரத்தில் நடந்த யுத்தகளங்களில் மகாஜயம் பெற்றதன் நிமித்தம் அவருடன் சென்ற வியாஸராஜர் உடுப்பிஸ்வாமிகளின் சொத்துக்களுக்கு ராஜாங்கபயம்



யாதொன்றும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொடுத்தார். அச்சமயம் உடுப்பியிலுள்ள எல்லா ஸ்வாமிகளாலும் ஆதரிக்கப்பட்டவராய் அங்குசிலநாள் வசித்திருந்து ஸ்ரீகிருஷ்ணனை ஆனந்தமாய் தரிசித்து பிறகு மத்யதாளமடத்தில் வசித்து வந்தார். ஸ்ரீபகவத்பாதாளுக்கு ஸ்ரீவேதவியாஸரால் அளிக்கப்பட்ட எட்டு வியாஸமுஷ்டிகளில் ஒன்று அங்கு இருந்ததை தினம் பூஜித்துவந்தார். நரஸிம்ஹபூபதியை அழைத்து வந்து வியாஸராஜர் தங்களுக்குச்செய்த பேருதவியை எண்ணி உடுப்பி ஸன்னியாஸியார்களெல்லாம் சேர்ந்து அவர்களுக்குச்சொந்தமான இந்த வியாஸமுஷ்டியை வியாஸராஜருக்கே பரிசாக அளித்தனர். வியாஸராஜர் சந்தோஷமாய் அதைப்பெற்று தினம் ஆராதித்து வந்தார்.

## பண்டிதர்களை வென்றது.

வியாஸராஜர் நரஸிம்ஹபூபதியின் ஆசிரயத்தை வைத்துக்கொண்டு உலகில் அநேக ஸத்காரியங்களைச்செய்தார். விசேஷமான கீர்த்திபடைத்தார். பெரும்பாண்டியத்யமும் குடிகொண்டிருந்தது. சந்திரகிரியிலிருந்த சமயம் ஆங்காங்கிருந்த பல பண்டிதர்கள் நரஸிம்ஹபூபதியின் சபையில் வியாஸராஜருடன் வாதமாட சமயபந்தங்களுடன் சித்தமாயிருந்தனர். விவாதம் பலமாய் பதினெட்டுநாள் நடைபெற்று முடிவில் வியாஸராஜர் தான் ஜயம் பெற்றார். முடிவில் அனைவரும் மௌனமாய் உட்காரந்து விட்டனர். அரசன் மிகவும் களிப்படைந்து அச்சமயம் வியாஸராஜருக்கு அநேக கிராமங்களை ஜாகீர் விட்டான். நரஸிம்ஹபூபதி வியாஸராஜரின் அனுக்ரஹத்திற்கு முக்யபாத்திரனாயிருந்து காலகதியை அடைந்தான். இந்த நரஸிம்ஹபூபதியை இந்துதேச சரித்திரக்காரர்கள் முதலாவது ஸளுவ நரஸிம்ஹராஜனென்றறிவார்கள். அவனுடைய குமாரன் தம்மராயன். பிறகு 1493ஷுத்தில் ராஜ்யத்திற்கு வந்தான். அவன் இரண்டாவது ஸளுவ நரஸிம்ஹனென்றறியப்படுவோன். தந்தையான நரஸிம்ஹபூபதியைப்போலவே தம்மராயனும் வியாஸராஜரிடம் மிகுந்த பக்தியுடன் நடந்து கொண்டான். அடிக்கடி உபதேசங்களைப்பெற்று ஆதரித்து வந்தான். வியாஸராஜர் நரஸிம்ஹபூபதியிடம் வாக்களித்திருந்தபடி ஸ்ரீவெங்கடேசனை பூஜித்திருந்தார். அச்சமயம் அர்ச்சகனின் பாலகன் சரியான வயதை அடைந்து ஸ்ரீவியாஸராஜரை வந்து நமஸ்கரிக்க பரமசந்தோஷத்துடன் ஸ்ரீவெங்கடேசனின் பூஜாதிகாரத்தை அவனிடம் ஒப்புவித்து ஸ்ரீவெங்கடேசனிடம் அதிக்ரமம் செய்தால் அவனுடைய முன்னோர்களுக்கு நேர்ந்த கதிவந்துசேருமென்று அறிவித்து ஒழுங்காய் ஸ்ரீ

வெங்கடேசனிடம் நடந்துகொள்ளும்படி எச்சரிக்கைச்செய்து அனுப்பினர். பிறகு வியாஸராஜர் ஸ்ரீனிவாஸனை நமஸ்கரித்து தம்முடைய இந்த கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்தித்தார். தம்மராயனுடைய காலமும் முடிவடைந்தது. இனி வியாஸராஜருக்கு திருப்பதியிலிருக்க வேண்டிய நிர்பந்தமில்லை என்பதை அப்பால் ராஜ்யத்திற்குவந்த நரசபூபதி அறிந்து பிரதான மந்திரியான அப்பாஜியை அனுப்பி அச்சமயம் பிரதான நகரமாய்ஏற்பட்ட விஜயநகரத்திற்கு வரும்படி வியாஸராஜரை பிரார்த்தித்தான். வியாஸராஜர் பிறகு சந்திரகிரியை விட்டு விஜயநகரம்சென்றார். இச்சமயம் ஸ்ரீவியாஸராஜருக்கு வயது சுமார் நாற்பத்திரண்டு இருக்கும்.

## பஸவபட்டரின் பராஜயம்.

வியாஸராஜருக்கு அப்போது விசேஷமான பரிவாரங்கள் ஏற்பட்டிருந்தன. ஸுவர்ணமயமான பல்லக்கிலேறிக்கொண்டு விஜயநகரம் வந்து சேர்ந்தார். நரசசக்ரவர்த்தி நகரத்தின் வெளிபுரத்திலிருந்தே மிகுந்த மரியாதையுடன் எதிர்கொண்டழைத்துப்போய் பட்டணபிரவேசம் செய்வித்து பெரிய மடாலயத்தில் தங்கியிருக்கச் செய்தான். பலமரியாதைகளைச்செய்து மிகவும் ஆதரித்து வந்தான். வியாஸராஜர் விஜயநகரத்திலும் பலவருடங்கள் வசித்தார். அச்சமயம் வியாஸராஜரிடம் சாஸ்திராப்பியாஸம் செய்துகொண்டு எண்ணிறைந்த சிஷ்யர்களிருந்தனர். யதீசுவரர்களேசர் இருந்ததாய்த் தெரியவருகிறது. உலகபிரசித்தராய் ஸ்ரீபாண்டுரங்கனின் கிருபைக்கு பாத்திரராயிருந்த புரந்தரதாஸர் அக்ஷோப்யதீர்த்த மடத்து நாராயண தீர்த்தர், ஸோதே மடத்து வாதிராஜஸ்வாமிகள் ஸுமதீந்திரமடத்து விஜயீந்திரஸ்வாமிகள், ரகுபதிதீர்த்தர், கோவிந்த தீர்த்தர் முதலியவர்கள் வியாஸராஜரிடம் சாஸ்திராப்யாஸம் செய்தவர்களாவார்கள். வாதிராஜர் வியாஸராஜரிடம் சாஸ்திராப்யாஸம் செய்து முடித்துக்கொண்டு தமது ஸ்தலமாகிய உடுபிக்கு செல்லும்போது வியாஸராஜருக்கு உடுபிஸ்வாமிகள் கொடுத்திருந்த வியாஸமுஷ்டியைக் கொண்டுபோய் விட்டார். வாதிராஜர் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டதாய் வியாஸராஜரிடம் சிஷ்யர்கள் அறிவித்தனராம். வியாஸராஜர் அப்படியானல் வியாஸமுஷ்டியும் போயிருக்குமே என்றாராம். வாதிராஜோகத: என்று சொன்னதற்கு தர்ஹி வ்யாஸோபிகத: என்று சொல்லப்பட்டதாய் ப்ராசீனர்கள் சொல்லுவதுண்டு. வியாஸராஜருக்கு நரசச்சக்ரவர்த்தி வித்யாஸிம்ஹாஸனத்தைத்தந்து பண்டிதர்களில் பெரும் பதவியை அளித்திருந்தான்.

(தொடரும்.)



# காடகோபநிஷத்.

முதலாவது அத்யாயம், முதலாவது வல்லி. (முன் தொடர்ச்சி)

(20) இனி இரண்டாவது அத்தியாயத்தில் முக்தஜீவர்களின் நியாமகஸ்வரூபத்தையும் ஐந்தாவது அத்தியாயத்தில் மிருதஜீவகர்ளின் நியாமகஸ்வரூபத்தையும் சொல்லபபட்டபோயினும் ஹேநசிகேதஸ்ஸே! தேவர்களாலும் கூட நீர் கேட்ட இந்த பிரசினை விஷயத்தில் சந்தேகமடைந்து விசாரம் செய்யப்பட்டது. ஜனங்களை தரிப்பதால் தர்மமெனப்படுகிறவரான, மிருதன் முக்தன் இவர்களுக்கு நியாமகனை, பகவான் ஸ்ரீ ஹரி ஸுலபமாய் அறியகூடியவனன்று. ஏனென்றால் அவர் பரமஸூக்ஷ்மமாய் அவ்யக்தமான ஸ்வாபமுள்ளவர். ஆகவே ஹேநசிகேதஸ்ஸே! இறந்தவனுக்கு நியாமகன் இன்றென்பதை உபதேசிக்கும்படிக்கேட்ட வரனைத்தவிர்த்து வேறு வரனைக்கேளும், என்னை இந்த பிரசினை விஷயத்தையேசொல்லுமென்று நிர்பந்தப்படுத்தாதேயுமென்று யமன் சொன்னார். அதைக்கேட்டு நசிகேதஸ்ஸு சொல்லுகிறார். இவ்வாறு என்னை உதரித்துள்ளாதேயுங்கள். (21) ஹே மிருத்தியுவே! தாங்களே இந்த பகவத் ஸ்வரூப விஷயத்தில் தேவர்களாலும் சந்தேகிக்கப்பட்டு விசாரம்செய்யப்பட்டிருக்கிறது ஆகையால் சுலபமாக அறிக்கூடியவரன்று என்று சொல்லியிருக்கிறீர்கள். தங்களைப்போல் என்னுடைய பிரசினை விஷயத்தைச் சொல்லுகிறவர்வேறு யாரும் கிடைக்கமாட்டார். ஆகவே இந்த வரத்திற்கு ஸமமாக வேறு எந்த வ்ரமுமில்லை என்று நசிகேதஸ்ஸு சொல்லவும் நசிகேதஸ்ஸின் மனதை பரீக்ஷிக்க யமன் சொல்லுகிறார். (22) பூர்ணாயுஸ்ஸுகளான புத்திரர்கள் பௌத்திரர்கள் இவர்கள் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுங்கள்; அநேக பசுக்களையும் யானைகள் குதிரைகள் தங்கம் இவைகளையும் மிகவும் விஸ்தீர்ணமான பூமியையும் எதுவரை ஜீவிக்க இச்சையோ அதுவரை ஆயுளையும் வேண்டிக்கேட்டுக்கொள்ளுங்கள். (23) நீங்கள் கேட்ட வரனுக்கு சமானமானதென்று எந்த வரனை நீர் எண்ணுகிறீரோ அந்த வரனை வேண்டுங்கள். பணத்தையும் வெகுநாள் ஜீவித்தி

ருப்பதற்கு காரணத்தையும் வேண்டிக்கொள்ளுங்கள். நசிகேதஸ்ஸே! புண்ணியபூமியில் பிறப்பதை வேண்டிக்கொள்ளும். புண்ணியபூமியில் விருத்தியை அடையும். விரும்பப்படுகிறவைகளை அடைந்தவராய் உம்மைச்செய்கிறேன். (24) பூலோகத்தில் அல்லது மனுஷ்ய சரீரத்தில் எந்த எந்த வஸ்துக்கள் கிடைக்க கஷ்டப்படுமோ அந்த எல்லா வஸ்துக்களையும் உங்களிஷ்டப்படி வேண்டிக்கொள்ளுங்கள். உத்தமமானரூபம் சீலம் முதலான குணமுள்ளவர்களும் அல்லது என்னுடைய லோகத்திருப்பவர்களும் ரதங்களிலேறி இருப்பவர்களும் வாத்தியங்களை வாசித்திருப்பவர்களுமான ஸ்திரீகளை வேண்டிக்கொள்ளுங்கள். இத்தகைய சம்பத்து மனுஷ்யர்களால் அடைய முடியாததாகும்; ஆகவே நான் சொன்னஸம்பத்தைக்கேளும்; என்னால் கொடுக்கப்படுகிற இந்த ரதாதிகளுடன் கூடிய ஸ்திரீகளால் ஹேநசிகேதஸ்ஸே! ஸேவிக்கப்படுகிறவராய்ஆகுங்கள். இறந்தவனுக்குள்ளிருக்கும் பகவானைப் பற்றி கேட்காதேயும். அது மிகவும் ரகசியம் இவ்வாறு யமன் நசிகேதஸ்ஸைஏமாற்றப்பார்த்ததற்கு நசிகேதஸ்சொல்லுகிறார்(25) ஹே அந்தகனே! மனுஷ்யனுடைய இந்த புத்திரன் பௌத்திரன் பசு முதலியவை மறுநாள் இல்லாமற்போகிறவைகள்; அவைகளை ரக்ஷிக்கும் சிரமத்தால் எல்லா இந்திரியங்களின் ஸாமர்த்தியமும் தொலைந்து போகின்றன. ஆகவே இந்த புத்திரபௌத்திரர்கள் எதற்காக? வெகுகாலம் பிழைத்திருந்தால்தானென்ன? மன்வந்தரம் வரைப்பிழைத்திருந்தாலும் மறுநாள் பிராணனை வேண்டியதுதான். ஆகவே அதுவும் வேண்டியதில்லை. ரதாதி வாகனங்கள் தங்களுக்கே இருக்கட்டும். (26) பணத்தால் மனுஷ்யன் திருப்தி அடையமாட்டான். ஆதலால் நான் திரவியத்தை வேண்டுவதில்லை. அப்படிக்கேட்பதும் அனாவசியம். உம்மை நான் பார்த்தபின் பணத்தை அடையப் போகிறோம். எவ்வளவு காலம் எனக்கு ஆயுளைக்கொடுக்கத் தமக்கு சக்தியுண்டோ அது வரை நாம் பிழைத்திருக்கப்போகிறோம். ஏனென்றால் தாம்தான் ஆயுளைத்தடுப்பவர் ஆகவே நான் அதையும் வேண்டுகிறதில்லை. பின் எதை வேண்டுகிறீரென்றால் நான் முன்பு எந்த வரனைக் கேட்டேனோ அந்த உத்தமமான வரந்தான் என்னால் வேண்டப்படுகிறது.

(தொடரும்.)



# ஆசாரமாலை.

போஜனவிதானத்தைப்பற்றி நாம் விஸ்தாரமாய் எழுதியிருந்ததைக் கண்ணுற்ற எமது மித்திரன் வாசகர்களில் பலர் மாத்வர்கள் அதிகாலையிலிருந்தே அனுஷ்டிக்க வேண்டிய எல்லா ஆசாரணைகளையும் அறிவிக்க கேட்டுக்கொண்டிருப்பதால் அவைகளை அறிவிக்கத்துணிந்தோம். நாஸ்திக்யம் மிகுந்து நாகரீகம் தலைகொழுத்தாடும் இந்நாளில் இந்த எமதுப்ராசீன ஆசாரங்களில் அநேகம் பலர்களுக்கு பரிகாஸாஸ்பதமாகவே இருப்பினும் மேனாட்டு படிப்பாளிகளில் பலர் தற்போது எமதுப்ராசீன ஆசாரங்களை வெகுவாய்க் கொண்டாடியிருக்கின்றனரென்பதை அவர்கள் அறியவேண்டியதவசியமாகும்.

## உத்தானம்:—

படுக்கையைவிட்டு பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்கவேண்டும். இரவின் 5-வது பாகம் பிராம்ம முகூர்த்தமெனப்படும். அந்த முகூர்த்தத்தில் செய்யும் நித்திரை ஒருவனுடைய புண்யங்களைக்குறைக்கும். மோகத்தால் ஒருவன் தூங்கிவிட்டால் கால்பாகம் கிருச்ரத்தைச் செய்ய வேண்டும் என்று ரத்னாவளியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹரே கிருஷ்ண வாஸுதேவா என்று சொல்லிக்கொண்டு பகவத்ஸ்மரணத்துடன் எழுந்து கைகால்களையும் முகத்தையும் கழுவிக்கொண்டு சுத்தனாகி பகவத்ஸ்தோத்திரபாடங்களைச் சொல்லவேண்டும். ஸ்நானம் செய்தோ செய்யாமலோ எக்காலத்திலும் சரியே நின்றோ உட்கார்ந்தோ நடந்தோ படுத்தோ விழித்துக்கொண்டோ பானம் செய்துகொண்டோ போஜனம்செய்துகொண்டோ விளையாடிக்கொண்டோ சிரித்துக்கொண்டோ பகவான் ஸ்ரீஹரியின் நாமாவைச்சொல்லலாம். இதர தெய்வங்களுடையதோ மகரிஷிகளுடையதோ நாமாவை அசுத்தமாக இருந்து சொல்லலாகாது. கிருஷ்ண கிருஷ்ண என்று சொல்லுகிறவனை ஜலத்திலிருந்து தாமரையை பிடுங்கி எடுப்பதுபோல் நரகத்திலிருந்து தப்புவிக்கிறேனென்றார் பகவான். பிறகு ஆசமனம் செய்யவேண்டும். மனமிட்டம் தாராவிடில் ச்ரோத்ராசமனம் செய்யலாம். பிராம்மணனுடைய வலதுகாதில் ஸூரியாதி தேவர்களும் புஷ்கராதி தீர்த்தங்களும் இருக்கின்றனவென்றும் நாஸிகையில் அக்னி இருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளை வலதுகை 5-விரல்களை சேர்த்து மூன்றுதரம் தொட்டால்

ஆசமனம் செய்ததாகும். அதற்கு ச்ரோத்ராசமனமென்று பெயரிடப்பட்டிருக்கிறது. த்ரிவாமன ஸ்தோத்திரம் துளஸிஸ்தோத்திரம் கஜேந்திரமோக்ஷம் முதலியவைகள் சொல்லப்படுவதுண்டு. அன்று சரியான போஜனம் கிடைக்கவும் ஞானசித்திக்காகவும் வாமனமூர்த்தியின் ஸ்தோத்திரமும், எல்லா பாபநிவர்த்திக்காகவும், ஸம்பத்து விர்த்திக்காகவும், புண்ய விர்த்திக்காகவும் கஜேந்திரமோக்ஷத்தையும் சொல்லவேண்டியதாகும். அப்படியே பிரம்மாதிகள் பரியந்தமுள்ள எல்லா குருமார்களையும் பகவத்பக்தர்களையும் ஸ்மரிக்கவேண்டும். பிறகு தன்னுடைய காலடிபடுவதையும் மலமூத்திராதிகளின் சம்மந்தம் பெறுவதையும் க்ஷமிக்க வேண்டுமென பூமிதேவியை ப்ராத்திக்கவேண்டும்.

சௌசம்:—

மலோத்ஸர்ஜனத்தை தான் வசிக்கும் ஊரின் தென்மேற்கிலோ அல்லது மேற்கிலோ வெகுதூரம்போய் செய்யவேண்டும். காலால் பூமியில் குப்பைகளை தள்ளிக்கொண்டு அதன்மீதுதான் மலோத்ஸர்ஜனம் செய்யவேண்டும். பூணூலை காதில் பின்புறமாய்ச் சுற்றிக்கொண்டு தலையில் முண்டாசுகட்டி கையால் முகத்தைப் பொத்திக்கொண்டு அச்சமயமிருக்கவேண்டும். பகலில் வடக்கேயும் இரவில் தெற்கேயும் மாலையில் மேற்கேயும் நோக்கவேண்டும். மரத்தின்நிழலிலோ பகலாயிருந்தாலும் சரியே இரவாயிருந்தாலும் சரியே சௌகரியப்படி உட்காரலாம் என்றார் ரிஷ்யசிருங்கர். பூணூல் கழுத்தில் அச்சமயம் தொங்கிக்கொண்டிருந்தால் பூணூல் நூதனமாய்த்தரிக்கவேண்டும். நடைப்பாதை, களார்பூமி, ஆற்றங்கரை, ஸ்வாமி பிராம்மணர்கள் இவர்களின் சன்னதி, இருட்டிலோ பராண சங்கடத்திலோ பயிருள்ளநிலம், ஆற்றுப்பாலம், புதர், மரம், அசுவத்த விருக்ஷாதிகளின் நிழல், சூரியசந்திராதிகளின் எதிர் இவைகளில் மலோத்ஸர்ஜனம் செய்யலாகாது. அச்சமயம் மௌனமாயிருக்கவேண்டும். தலையில் கையை வைத்துக்கொள்ளலாகாது. ஈரவஸ்திரம் உடுத்திருக்கலாகாது. ஸ்நானம், போஜனம், ஹோமம், ஜபம், தந்ததாவனம், மலோத்ஸர்ஜனம், மூத்திரோத்ஸர்ஜனம் இந்தஏழுகாலங்களில் மௌனமாயிருத்தல் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறதென்றார் யோகீஸ்வரர். ஆறு, ஏரி, குளம், கிணர், மடு, புஷ்கரிணி இவைகளில் ஜலசௌசம் செய்துக்கொள்ளலாகாது. சொம்பில் ஜலத்தை எடுத்துக்கொண்டு வந்து மூன்று முழத்திற்கப்பால் வைத்துக்கொண்டிருந்து மலோத்ஸர்ஜனமானபின் ஜல சௌசம் செய்துகொள்ளவேண்டும். (தொடரும்)



# ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாளியற்றிய
# மணிமஞ்சரி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது.)
இரண்டாவது ஸர்க்கம். (முன் தொடர்ச்சி.)
(காபி ரைட்)

23. ஸுராணகாளென்னும் அஸுரர்கள்தான் அயோத்தியில் வண்ணார்களாய் பிறந்திருந்ததால் அவர்களின் மீது குற்றத்தை சுமத்தி அவர்களை தபஸ்ஸில் வீழ்த்த ஸ்ரீராகவன் சீதையை அவர்களின் வார்த்தையின் பேரில் விலக்கி காட்டிற்கு அனுப்பியதாய் காட்டிக்கொடுத்தார். மகாலட்க்ஷிமியான சீதை எங்கும் வியாபித்திருப்பவளானதாலும் தோஷமற்றவளானதாலும் அவளை இவர் எப்படி விடக்கூடும். 24. ஸ்ரீராகவன் அசுவமேதயக்ஞத்தைச்செய்தார். யக்ஞபுருஷன் இவரேயாவார். இவர் யக்ஞம் செய்தது தன்னையே யக்ஞத்தால் பூஜித்துக் கொண்டதாகும். அச்சமயம் மகாஸாத்வியான சீதை வந்திருந்தாள். யக்ஞம் முடிந்தவுடன் அந்த யக்ஞவேதிகையிலேயே அந்தர்த்தானமடைந்தாள். 25. ஸ்ரீராகவன் தர்மசாஸ்திரம் ஸாங்கியசாஸ்திரம் யோகசாஸ்திரம் இவைகள் ப்ரவிருத்திக்கச்செய்தார். அவைகளை ஹனுமார் பாடம் சொல்லிவந்தார். இதனால் ஸகலஸம்பத்துக்களும் நடனமாடிவந்தன. 26. இயற்கையாகவே பரமவிரக்தர்களாயுள்ள ப்ரம்மாவின் மானஸ குமாரர்களான ஸனகாதிகள் இந்த சாஸ்திரங்களை எல்லாம் ஹனுமாரிடமிருந்து சிரவணம்செய்து உலகில் செவ்வனே அவைகளை வெளியிட்டுவந்தனர். 27. ஜனங்களெல்லாம் எங்கும் "ஸ்ரீராமனுக்கு நமஸ்காரம். அழகிய சரீரங்கொண்ட ராமனுக்கு நமஸ்காரம். ஹேராமா! ராமா! நமஸ்காரம் நமஸ்காரம். ராமன் என்க்கு ஸ்வாமி. ராமன் எனக்கு கதி" என்றிவ்வாறு கதரிக்கொண்டிருந்தனர். 28. ஸ்ரீராகவன் பரந்தாமத்திற்குச் செல்ல தேவர்கள் பிரார்த்திக்க ஸ்ரீராகவனுடைய ஆக்ஞையின்பேரில் லஷ்மணர் ஆதிசேஷனாய் மாறி க்ஷீரஸமுத்ரம் சென்றார். 29. பிறகு ஸ்ரீராகவன் யார் யார் மோக்ஷத்தை அடைய

இஷ்டப்படுகின்றனரோ அவரவர்கள் வாருங்கள் வாருங்கெ தூதர்களைக்கொண்டு உலகெங்கும் பறை சாற்றும்படி. செய் 30. பிறகு ஸ்ரீராகவன் அவ்வாறு வந்துசேர்ந்த அநேக வான மிருகங்களுடனும் மனுஷ்யாதிகளுடனும் மற்றும் கணக்க பலவகை ஜந்துக்களுடனும் சூழப்பட்டவராய் அவர்களை அழை துக்கொண்டு ஸீதாஸமேதராய் உத்தரதிசை நாடிச்சென்றார். 31. அவர்களுக்கெல்லாம் மோக்ஷபதவியை அளித்துவிட்டு ஹனுமாருக்கு விடைகொடுத்தனுப்பி ஸ்ரீராகவன் ஸீதையுடன் அவருடைய பரந்தாமமான வைகுண்டத்தைப்ரவேசம் செய்தார். 32. ஹனுமார் கிம்புருஷகண்டத்திலிருந்து கொண்டு உண்மை யான பக்தியோடும் வைராக்யங்கொண்ட பக்தியோடும் ஹாராமா என்று ஸதா துதித்துக்கொண்டு பரமானந்தமடைந்து வந்தார்.

இரண்டாவது ஸர்க்கம் முடிந்தது.

## மூன்றாவது ஸர்க்கம்.

1. பிரம்மாவின் குமாரரான அத்ரிமகரிஷிக்கு சந்திரன் மகனாய்ப் பிறந்தான். சந்திரனுக்கு நவக்ரஹத்தில் ஒருவனான புதன் மகனாவான். அவனுக்கு புரூரவஸ் என்னும் சக்ரவர்த்தி மகனாய்ப்பிறந்தார். 2. அந்த புரூரவஸ்ஸு ராஜனுக்கு ஆயு என்ற அரசன் மகனான். அவனுடைய பிள்ளை நஹுஷராஜன். அவனுடைய பிள்ளை மகாபலம் வீரியம் பொருந்திய யயாதிராஜன். 3. அந்த யயாதிராஜன் தேவயானி, சர்மிஷ்டை என்னும் இரண்டு பெண்களை விவாகம் செய்து கொண்டான். மூத்தவளான தேவயானி சுக்ராசாரியாரின் மகள். இளையாளான சர்மிஷ்டை அஸுரராஜனான விருஷபர்வராஜனுடைய மகள். 4. யயாதிராஜனுக்குதேவயானியிடம் யதுராஜன் துர்வஸுராஜனென்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். சர்மிஷ்டையிடம் த்ருஹ்யுராஜன், அனுராஜன், பூருராஜன் என்ற மூன்று குமாரர்கள் பிறந்தனர். 5. யயாதிராஜனின் மூத்தகுமாரனான யதுராஜனின் வம்சத்தில் கார்த்தவீரியார்ஜுனன் முதலான மகாராஜாக்கள் பிறந்தனர். அவர்கள் தவம் செய்தவர்கள். ஆத்மஞானம் பெற்றவர்கள். அதனால் ஈசுவரபக்தி கொண்டவர்கள். 6. பூருராஜனின் வம்சத்



தில் துஷ்யந்தராஜன் பிறந்தான். அவனுடைய பாரியை சகுந்தலை. அவளிடம் பரதனென்ற மகாராஜாபிறந்தான். அந்த பரதனால் தான் அந்த வம்சத்தார்களுக்கு பாரதரென்றேபெயர் ஏற்பட்டது. இந்த பூருராஜனின் வம்சத்தார்களாகிய பாரதாதிகளின் கீர்த்தியும் பராக்கிரமமும் எல்லா திக்குகளிலும் வியாபித்திருந்தன. 7. அச்சமயம் பூலோகத்தில் காலநேமி முதலான அநேக ராக்ஷஸர்கள் பிறந்திருந்தனர். அவர்களின் பாரத்தைத்தாங்காமல் பூதேவி கோரூபத்துடன் பிரம்மாவை பிரார்த்திக்கவும் அதைத்தொலைக்க விருப்பங்கொண்டு ச துர்முன் முதலிய எல்லாதேவர்களும் க்ஷீர சமுத்திரக்கரைக்கு சென்றனர். எல்லோரும் சரணம் புகவேண்டியவரான அங்கு சயனித்திருக்கும் ஸ்ரீநாராயணனை அவர்கள் சரண்புகுந்தார்கள். 8. அப்பொழுது பகவான் ஆக்ஞையிடவும் தேவர்கள் பூலோகத்தில் பகவானுக்கு சம்பூர்ணம் கைங்கரியம் செய்வதற்காக வேண்டி மனுஷ்யர்களாய் பிராம்மணக்ஷத்திரியாதி ஜாதிகளில் பிறந்தனர். 9. வருணபகவான் பூருராஜனின் வம்சத்தில் சந்தனு சக்ரவர்த்தியாய் பிறந்தார். அவருடைய பிள்ளை விசித்ரவீர்யனென்றவன். விசித்ரவீர்யனுக்கு சித்ராங்கதனென்று ஓர் தம்பியுமிருந்தார். அவர் விவாகமில்லாமலே இறந்தார். 10. விசித்ரவீர்யனுக்கு திருதராஷ்டிரன் பாண்டுராஜன் என்று இரண்டு குமாரர்களிருந்தனர். பாண்டு ராஜனுக்கு குந்தி, மாத்ரி என்று இரண்டு பாரியைகள். அவர்களிருவரும் தர்மங்களை நன்கறிந்தவர்கள். 11. அந்த பாண்டுராஜனுக்கு கிந்தமரென்ற ரிஷியின் சாபம் ஏற்பட அதனால் அவர் ஸ்திரீ சங்கம் செய்யமுடியாமற்போய்விட்டது. குந்தீ பாண்டுராஜனின் ஆக்ஞையின்பேரில் மந்திரபலத்தைக்கொண்டு யமதர்மனை வரவழைத்து அவரால் யுதிஷ்டிரரென்றமகனை அடையப் பெற்றாள். 12. திருதராஷ்டிரனின் பாரியை காந்தாரி. அவளிடம் துர்யோதனன் முதலான நூறுபேர்கள் பிறந்தனர். இவர்கள் கலி முதலான தைத்யர்களேயாவார்கள். இவர்களை கொல்லுவதற்காக வென்று வாயுபகவான் குந்தீயிடம் பீமசேனராய் பிறந்தார். 13. குந்தி இந்திரனிடமிருந்து அர்ஜுனனைப் பெற்றாள். மாத்ரி அசுவினீ தேவர்களிடமிருந்து நகுலன், சகதேவன் என்று இரட்டைப்பிள்ளைகளைப்

பெற்றாள். பாண்டுராஜன் இந்த பிள்ளைகளை ரக்ஷித்துக்கொண்டு வனத்திலிருந்தார். இவர்கள் பாலியத்திலே வனத்தில் வளர்ந்தனர். 14. பாஞ்சாலர்கள் பால்ஹீகர்கள் பிறந்து இவ்வாறே மகாபலிஷ்டர்களாய் விருத்தியடைந்தனர். யயாதிராஜனின் குமாரனான யதுராஜனின் வம்சத்தாராகிய ஆஹுகராஜனுக்கு உக்ரசேனன் மகனாவான். தேவகனும் மகனாவான். தேவகனுடைய குமாரிதான் தேவகி. அவளிடம் பகவான் ஸ்ரீகிருஷ்ணனாய் அவதாரம் செய்தார். அவள் தேவர்களாலும் போற்றப்படுபவள். யதுவம்சத்தவனாகிய சூரராஜனின் பிள்ளையாகிய வஸுதேவன் தேவகியை விவாகம் செய்துகொண்டான். 16. அந்த தேவகியிடம் பகவான் ஸ்ரீநாராயணர் ஸ்ரீகிருஷ்ணராய் ஆவிர்பவித்தார். அவர் அப்பொழுதே பிறக்கவில்லை. அவர் மகாபுராதனர். தேவர்களின் காரியத்தை முடித்துக் கொடுக்கவும் வஸுதேவன் தேவகி ஆகிய இந்த தம்பதிகளின் இச்சையை பூர்த்தி செய்யவும் அவர் ப்ராதுர்பவித்தார். 17. இந்த கிருஷ்ணாவதாரத்திற்கு முன்பு ரோகிணி என்ற பத்னியிடம் வசுதேவருக்கு பலராமர் பிறந்தார். அவர் மிகுந்த பலிஷ்டராயிருந்ததால் அவர் பலராமரென பெயர் பெற்றார். அவர் ஆதிசேஷரேயாவார். 18. சிதானந்த சொரூபரான பகவான் ஸ்ரீஹரி சியாமளவண்ணராய் சங்கு சக்கரம் கதை இவைகளைதரித்த சதுர்புஜயுக்தராய் அப்போதே ஆவிர்பவித்ததைக் கண்டு வசுதேவன் மகாஸ்தோத்திரம் செய்தான். சாக்ஷாத் நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணராக இந்த வசுதேவரிடம் பிறக்கப் போகிறாரென்ற சந்தோஷத்தால் வசுதேவர் பிறந்தவுடனே தேவர்களின் ஆனகவாத்தியம் துந்துபிவாத்தியம் இவைகள் தாமாகவே முழங்கியதால் இந்த வசுதேவருக்கு ஆனக துந்துபி என்ற பெயர் வந்தது. 19. அசரீரி அறிவித்தபடி எட்டாவது குழந்தையாய் பகவான் ஆவிர்பவித்ததைக் கண்டவுடன் வசுதேவர் கம்ஸன் குழந்தையை என்ன செய்வனோவென்று பயந்தார். உடனே ஸ்ரீகிருஷ்ணர் தன்னை நந்தகோகுலம் கொண்டு போகும்படி வசுதேவரை ஆக்ஞாபித்தார். அங்கு நந்தகோபனின் பாரியாளான யசோதை பிரஸவமாகி அவள் படுக்கையில் படுத்திருந்தாள்.

(தொடரும்.)



# மதிப்புரை.

## ஸம்ஸ்கிருத தமிஷ் டிக்ஷனரி.

கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கும் இவ்வரிய நூல் மதிப்புரைக்காக எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதிற்கண்ட விஷயங்களை உற்று நோக்குங்கால் எமது சாஸ்திரங்களை படித்தறிய விரும்பும் உபாயமான ஸம்ஸ்கிருத ஞானமுள்ளவர்களுக்கு இப்புத்தகம் ஓர் சிறந்த ஆசாரியனாகவே இருக்குமென்பது மிகையாகாது. சாமானிய காவியங்கள், ராமாயணம் பாரதம் முதலிய புராணங்கள் இவைகளின் சப்தங்களை அறிந்துகொள்ள அநேக நிகண்டுகளிருந்துவருகின்றன. தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, சாங்கியாதிகாரிகைகள், வேதமந்திரங்கள், சூக்தங்கள், உபநிஷத்துகள், பகவத்கீதை, பிரம்மசூத்திரங்கள் முதலியவைகளில் வழங்கிவரும் சாஸ்திரீய பதங்கள் ஏராளமாய் உதாகரிக்கப்பட்டு அவைகளுக்கு அவைகளின் அர்த்தத்தை கூடியவரை ஸுலபமாய் அறிவித்துக்காட்டும் சரியான தமிழ் பதங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அநேக இடங்களில் அந்தந்த பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ள சாஸ்திரீய வாக்யங்களே எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன, நாட்யஜ்யோதிஷம் முதலியவைகளின் பரிபாஷை சப்தங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. வியாகரணப்ரயோகங்கள், அவைகளின் மாறுதலால் ஏற்படும் அர்த்த விசேஷங்கள் முதலியவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சுருக்கிச்சொல்லின் இப்புத்தகம் சாஸ்திர பரிசீலனை செய்யும் ஒவ்வொருவருக்கும் இன்றிமையாததுதான். இதுவரை இம்மாதிரியான புத்தகத்தை இத்தமிழ்நாடு அடையப்பெற்றதில்லை எனலாம். இப்புத்தகம் தேவநாகரலிபியில் தோன்றியிருந்தால் அந்த லிபியில் அதிக பரிசயமுள்ள மாத்வ வகுப்பார்களுக்கு இந்நூல் பதின்மடங்கு உபயோகமாக இருக்கும். அதை அச்சிட அதிக பணச்சிலவு ஏற்படினும் இக்காலத்திய தென்னாட்டுப் படிப்பாளிகளுக்கு தேவ

நாகரம்தான் மிகவும் உபயோகமாக இருக்குமாதலால் இந்நூலுக்கு சரியான ஆதரவை கிடைக்கக்கூடுமென்பது எமது துணிபு. பாஷாக்ஞானமில்லாததாலும் சரியான ஆசாரியர்களை அணுக சந்தர்ப்பமில்லாததாலும், எமது ப்ராசீன சாஸ்திரங்களில் ஔதாசீன்யத்தைக்காட்டும் ஆஸ்திக மக்களுக்கு சாஸ்திரஞானமேற்பட பெருத்த உபகாரம் செய்துவரும் இந்நூலைத்தபாரித்து வெளியாக்கிய இதன் ஆசிரியரின் மேலானநோக்கத்தையும் தியாக புத்தியையும் பலவருடங்கள் அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தையும் இத்தென்னாட்டு ஆஸ்திகமக்கள் யாவருமே அவர்கள் த்வைதிகளாயிருந்தாலும் சரியே அத்வைதிகளாயிருந்தாலும் சரியே விசிஷ்டாத்வைதிகளாயிருந்தாலும் சரியே கொண்டாடாமலிருக்கமுடியாது. சுமார் 400பக்கங்களைக்கொண்ட இந்நூலின் கிரயம் ரூ. 5/- தபாற் கூலி அணா 8. திருமல்ராஜபுரம் ஜமீன்தார் பிரம்மஸ்ரீ N. E. வேங்கடேச சர்மா இதன் ஆசிரியராவார். இப்புத்தகம் அடியிற்கண்ட விலாசதாரரிடம் கிடைக்கும். N E. துரைசாமி அய்யங்கார் மனேஜர், பிரம்மஸாயுஜ்ய லைப்ரெரி, நேமம் கிராமம், திருமழிசை போஸ்ட், பூந்தமல்லி மார்க்கம், செங்கல்பட்டு ஜில்லா.

## புண்யாகவாசனம்.

எந்த சுபகாரியத்திற்கும் அதன் ஆரம்பத்தில் மாத்வர்கள் செய்துகொள்ளவேண்டிய புண்யாஹவாசன மந்திரங்களை அதன் ப்ரயோகத்துடனும் ஸ்வரத்துடனும் விஸ்தாரமாய் தேவநாகர லிபியில் அச்சுப்பிழைகளன்றி ஸ்ரீமான்களான தி. பு. தேவராஜா சாரியார், முக்கலராமாசாரியார் இவர்கள் வெளியிட்டது மிகவும் மெச்சத்தகுந்தது. ப்ரயோகம் செய்துவைக்கும் உபாத்யாயத்தொழிலைக்கொண்ட நம்மவர்கள் யாவருமே மிகவும் சொற்பமாக காணப்பட்டுவருகிறார்கள். வரவர அவர்களின் சங்கியை குறைந்துவருவதால் பல ஊர்களில் இத்தகையப்ரயோகங்களில் பயிற்சி பெற்றவர்களில்லாமல் வைதிககர்மாக்களே நின்றுபோகுமோவென்று சந்தேகிக்க இடமிருக்கிறது. ஆகவே அத்தகைய சங்கடங்கள் ஏற்படாதபடி சுபகர்மங்களோ அசுபகர்மங்களோ



இவைகள் எல்லாவற்றினுடையவும் பிரயோக புஸ்தகங்கள் இம்மாதிரியே வெளியேவந்து பிரசாரத்திலிருக்கவேண்டியது அவசியமாகும். சுமார் 30 பக்கங்களைக்கொண்ட இப்புத்தகத்தின் கிரயம் அணா 4/- ஒரு ரூபாய்க்கு சேர்ந்தார்போல் வாங்கினால் 5 புத்தகங்கள் கொடுக்கப்படும். கும்பகோணம் ரெட்டிராயர் அக்கிரஹாரம் ராமகிருஷ்ணவிலாஸ புஸ்தகாலயத்தில் இப்புத்தகம் கிரயத்திற்கு கிடைக்கும்.

## நவக்ரஹஸ்தோத்திரம்.

நமது நகர் ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீமான் R. சுதர்சன சர்மாவால் தேவநாகர லிபியில் இந்நூல் அச்சிடப்பட்டு எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எமது ப்ராசீனர்கள் பாராயணம் செய்துவந்த அனுஷ்டானப்படி பற்பல புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட சூரியாதி நவக்ரஹங்களின் ஸ்தோத்திரம், அவைகளில் ஒவ்வொரு கிருகத்தின் கவசம் இவைகள் சரியானபடி பிழையன்றி சோதிக்கப்பட்டு வெளியாக்கப்பட்டிருக்கின்றன. நவக்ரஹங்களின் பாதையில்லாமலிருப்பவர்களில்லை. அது உபசமனமடைய நவக்ரஹங்களின் ப்ரீதியை சம்பாதிப்பது அவசியமென எல்லோருமறிவார்கள். அதற்கு இந்நூல் மிகவும் உபகாரமாயிருக்கும். இன்னஇன்ன ஸ்வப்னம் விழுந்தால் இன்னஇன்ன பலனேற்படுமென்பதையும் இன்னூலின் கடைசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 4. தபாற் கூலி 1 அணா. புஸ்தகம் கிடைக்குமிடம் R. S. சர்மா 14. வெங்கடராவ் தெரு கும்பகோணம்.

## வினாக்கள்.

### (1)

சமீபத்தில் இறந்துபோன ஓர் மாத்வஸ்திரீயின் கர்மத்தைச் செய்ய அதிகாரி யாரென்பதில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அம்மாளுக்கு 2 புத்ரிகளும் அந்த புத்ரிகளுக்கு சிசுக்களான [ஆண்பெண் விபரம் தெரியவில்லை] சந்ததிகளும் இருக்கின்றனர். அவளுடைய மாமியார் உயிருடனிருக்கிறாள்.

# செய்தித்திரட்டு.

நாளது ஸம்வத்ஸரம் புஷ்யசுத்தசமி (18—1—31) முதல் 4 நாள் தென்பெண்ணை வடகரையில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாவபோதசுரரான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் ஆராதனை மகோற்சவத்திற்கு ஏராளமாய் ஜனங்கள் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனரென்றும் உளுந்தூர்பேட்டை வக்கீல் ஸ்ரீமான் பூவராகாசாரியாரின் மானேஜ்மெண்ட்லடங்கிய பூர்வாராதனை கம்மிட்டியாரால் பூர்வாராதனையும் ஸ்ரீ உத்தராதிமடத்தாரால் ஆராதனையும் மஞ்சகுப்பம் வக்கீல்கள் ஸ்ரீமான்களான பூவராகமூர்த்திராவ் P. R. நாராயணராவ் இவர்களால் உத்தராராதனையும் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டு விசேஷமான பிராம்மணஸந்தர்ப்பனை நடந்ததென்றும் ஸ்ரீரகூத்தமருக்கு நடந்த அபிஷேகங்கள் ஊர்வலம் முதலியவை கண்களைக் கவரக்கூடியதாயிருந்ததென்றும் விருத்தாசலம் வக்கீல் ஸ்ரீமான் S. கிருஷ்ணராவ் B. A., B. L., தன் பஜனை கோஷ்டியுடன் ஆராதனை தினத்தன்றும் ஸ்ரீஸ்வாமிகள் வலம் வந்தபொழுதும் மத்வமத ஸம்பிரதாயத்தின்படி ஹரிபஜனை செய்துவந்தாரென்றும் முக்யமான இச்சந்தர்ப்பத்தில் இன்னமும் விரிவாய் பஜனைகள் நடக்க ஓர் பஜனைக்கமிட்டி ஏற்படுத்தி அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச்செய்யவேண்டியது அவசியமென்றும் ஸ்ரீமான் R. வாஸுதேவராவ் B. A., அறிவிக்கிறார்.

விழுப்புரம் தாலூக்கா வொங்கம்பட்டு ஸ்ரீமத்வஸித்தாந்த ஸபாவின் ஆதரவின்கீழ் வழக்கப்படி 16-2-32 வயன்று ஸ்ரீமத்வநவமி மகோற்சவம் நடத்தப்படுமென்றும் அன்று காலையிலும் இரவிலும் ஸ்ரீபகவத்பாதாளின் சித்திரப்படம் வெளியே ஊர்வலமாய் பஜனையுடனும் மேளவாத்யங்களுடனும் வேதபாராயணத்துடனும் கொண்டுவரப்படுமென்றும் ஸ்தோத்திர பாராயணங்களுடன் அன்று பகலில் அலங்காரபங்தியுடன் பிராம்மண போஜனம் நடத்தப்படுமென்றும் இவ்வாறு மகோற்சவம் நடைபெறுவது இச்சபையின் 8-வது வருஷத்தியதாகுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சபைக்கு ஸ்ரீமான்களான R. பூவராகமூர்த்திராவ், B.A., B.L., K. சுப்புராவ், இவர்கள் காரியதரிசிகளாயும் கிராம முன்சீப் திருமலராவ் வைஸ் பிரஸிடெண்டாகவும், தாலூக்காபோர்டு மெம்பராகவுமுள்ள வக்கீல், S. கிருஷ்ணராவ் B.A., B.L., அவர்கள் பிரஸிடெண்டாகவுமிருந்துவருகின்றனர்.



28-1-32 வயன்று ஸ்ரீரங்கம் புது அக்கிரகாரத்தில் ஸ்ரீஸ்ரீ விசுவப்ரிய மத்வநாத வடையரென்ற யதீசுவரரின் முதல் வருஷத்திய மகா சமாராதனை உற்சவம் அவருடைய சிஷ்யர்களாலும் பூர்வாசிரமத்தின் சந்ததியார்களாலும் வெகுவாய் கொண்டாடப்பட்டதென்றும் இந்த ஸன்யாஸியார் கோயமுத்தூர் பிரசித்த வக்கீலாயிருந்து சமீபத்தில் காலஞ்சென்ற C. M. பத்மநாபாசாரியாரின் தகப்பனரான கோயமுத்தூர் பண்டித மத்வராயாசாரியாரென்றும் மகாபண்டித்யம் படைத்திருந்து பாடபிரவசனம் செய்துகொண்டு ஸ்ரீமத்வமத தீக்ஷையை விசேஷமாய் பெற்றிருந்தாரென்றும் சுமார் 108 வருஷம் உயிருடனிருந்து சென்ற வருடம்தான் பிருந்தாவன ஸ்தரானரென்றும் நமது நிரூபர் அறிவிக்கிறார்.

நமது நகரில் வியாஸராயர் அக்கிரஹாரத்தில் 6-2-32 சனிவாரத்தன்று வழக்கப்படி ஸ்ரீபுரந்தரதாஸர் புண்யதினத்தை பக்தகோடிகளின் திரவியத்தைக்கொண்டு ஸ்ரீமான் பிடில் பார்த்தசாரதிராவ் வெகு சிறப்பாய் நடத்திவைத்தாரென்றும் அன்று பகலில் சம்பிரதாயப்படி பஜனைகளும் விசேஷமான பிராம்மண ஸந்தர்பணையும் மாலையில் ஸ்ரீமான்களான பிடில் ஜயராம அய்யர் மிருதங்கம் ரங்கசாமி அய்யங்கார் இவர்களுடன் நாகராஜராயரின் வெகு பிரபலமான பில்லாங்குழல் கச்சேரியும் இரவில் நல்ல மேளக்கச்சேரியுடன் ஸ்ரீதாஸர்வாளிடம் படம் ஊர்வலமும் நடந்ததென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெங்கட்டராயர் அக்கிரஹாரத்திலும் ஸ்ரீமான் K. S. வெங்கோபராவ் தாஸர்வாளின் புண்யதினத்தை பிராம்மண சந்தர்பணையுடனும் இரவில் பஜனையுடனும் விமரிசையாய் நடத்தினர். பானுவாரத்தன்று ஸ்ரீமான் G. பூவராகாசாரியார் பிரஹ்லாத சரித்திரத்தைப்பற்றி உபன்யஸித்தார்.

18-1-32 முதல் உடுபியில் பரியாய மகோற்சவம் வெகு விமரிசையாய் நடைபெற்றதாகவும் ஜாதிமதபேதமின்றி எல்லாவகுப்பினர்களும் கிரிஸ்தவர்கள் பாதிரிமார்கள் மகம்மதியர்கள் கொங்கணிகள் லிங்காயதர்கள் முதலானவர்களும் பெருங்கூட்டமாய்வந்து தாராளமாய் ஸ்ரீ கிருஷ்ணரிடமுள்ள விசேஷபக்தியுடன் மகோற்சவத்தில் இந்துக்களுடன் கலந்துகொண்டனரென்றும் வடதேசங்களிலிருந்து நம்மவர்கள் பதினாயிரக்கணக்காய் வந்திருந்தனரென்றும் 18-1-32 வயன்று சிரூர் மடம் ஸ்வாமிகளிடமிருந்து சோதே ஸ்ரீவாதிராஜஸ்வாமிமடம் ஸ்ரீ விசுவேந்திர தீர்த்தஸ்வாமிகள் ஸ்ரீகிருஷ்ணன் கோயிற்பூஜையை பகிரங்கமாய் அதிகாரிகளின் நடுவில் ஒப்புக்கொண்டாரென்றும் இது அவருக்கு

மூன்றாவது தடவை பூஜாதிகார பாக்யமென்றும் அன்று அவர் நடத்திய தர்பாரில் அவ்வூர் சப் கலெக்டர், பல மகாராஜாக்களின் பிரதிநிதிகள் பிரமுகர்களான உத்யோகஸ்தர்கள் இதர மடத்து ஸ்வாமிகள் எல்லோரும் கூடியிருந்தனரென்றும் சோதேஸ்வாமிகள் பூஜாதிகாரத்தை ஒப்புக்கொண்டதாய் ஸ்ரீகிருஷ்ணன்கோயில் நிர்வாகஸ்தர் அறிவித்தவுடன் பலத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீஸ்வாமிகள் ஆஸனத்தில் அமர்ந்ததும் ஸ்வாமிகளுக்கு புஷ்பம் வழங்கி அவரவர்கள் பாதக்காணிக்கைகளை வரிசைக்கிரமமாய் ஸமர்ப்பித்தனரென்றும் அவைகளில் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டுக்காக சப் கலெக்டர் அருணாசலம் ஐ. ஸி. எஸ். அவர்களும், மைசூர் மகாராஜா, திருவாங்கூர் மகாராஜா, கொச்சி மகாராஜா கொல்லங்கோடு ராஜ குடும்பம், திருப்பதி மகந்து இவர்களுக்காக அவர்கள் பிரதிநிதிகளும் பாத காணிக்கைகளை ஸமர்பித்து குறிப்பிடத்தகுந்ததென்றும் கான்பகதூர் அப்துல்லா சாயேப் அவருடைய குடும்பத்தின் வழக்கத்தை அனுசரித்து காணிக்கையை செலுத்த காலில் ஒன்றுமில்லாமல் நடந்து சென்றபோது பலமான கரகோஷம் ஏற்பட்டதென்றும் ரிடையர்ட் கலெக்டர் ஸ்ரீமான் ராவ்பகதூர், S. N V. ராஜாசாரியார், சஞ்சீவிராவ் முதலியோர் பரியாய விசேஷத்தைப்பற்றி வெகுவாய் ஸ்லாகித்துப்பேசினரென்றும் வழக்கப்படி ஸ்ரீகிருஷ்ணனுக்கு பலவகை அலங்காரங்களுடனும் விசேஷமான ப்ராம்மண ஸந்தர்பணையுடனும் ரதோற்சவாதிகளுடனும் பரியாய மகோற்சவம் வெகு சிறப்பாய் முடிவுபெற்றதென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

கடலூர் ஸ்ரீமத்வஸபாவின் ஆதரவின்கீழ் 16-2-32 உயன்று புதுப்பாளையம் ஸ்ரீராஜகோபாலஸ்வாமி தேவாலயத்தில் அச்சபையின் பதினொன்றாவது வருடத்திய ஸ்ரீமத்வநவமி மகோற்சவக்கொண்டாட்டம் வழக்கப்படி விமரிசையாய் நடைபெற்றதாகவும் பிராம்மண சந்தர்பணை விசேஷமாய் நடந்ததென்றும் மாலையில் வக்கீல் குமாஸ்தா ஸ்ரீமான் லக்ஷ்மணராயரவர்களால் வாமன சரித்திரம் ஹரிகதாகாலக்ஷேபம் செய்யப்பட்டதென்றும் இரவில் மேளதாளங்களுடனும் பாணவேடிக்கைகளுடனும் யானை முதலிய விருதுக்களுடனும் பஜனை கோஷ்டியுடனும் ஸ்ரீராஜகோபாலஸ்வாமியும் ஸ்ரீமத்வாசாரியாரின் சித்திரப்படமும் வெள்ளி விமானத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டு பிரதான தெருக்களின் வழியாய் ஊர்வலம் கொண்டுவரப்பட்டதென்றும் அச்சபையின் காரியதரிசி ரிடையர்ட் தாசில்தார் ஸ்ரீமான் N. வெங்கோபராவ் அறிவிக்கிறார்.



திருச்சி ஸ்ரீமன்மத்வஸித்தாந்த ஸபையின் ஆதரவின்கீழ் 15-2-32 முதல் மூன்று நாட்கள் ஸ்ரீமத்வநவமி மகோற்சவம் கொண்டாடப்பட்டதென்றும் முதல்நாள் மாலை ஸ்ரீமான் திருப்பதி சாமதாஸரவர்களால் துருவசரித்திரம் ஹரிகதாகாலக்ஷேபம் நடத்தப்பட்டதென்றும் 16-2-32 உயன்று ஆராதனை தினத்தன்று பகலில் பிராம்மண ஸந்தர்பணையும் மாலையில் கடலூர் ஸ்ரீமான் பண்டிட் ரங்காசாரியாரவர்களால் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி உபன்யாசம் செய்யப்பட்டதென்றும் 17உயன்று மாலையில் ஸ்ரீமான் திருநெல்வேலி நாராயணஸ்வாமி தாஸரவர்களால் அனஸூயா சரித்திரம் ஹரிகதாகாலக்ஷேபம் செய்யப்பட்டதென்றும் மூன்று நாட்களும் ஸ்ரீமத்வவிஜய பாராயணமும் பஜனையும் நடந்ததென்றும் ஏராளமாய் கூட்டம் வந்திருந்ததென்றும் அச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் C. R. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

கரூரைச்சேர்ந்த ஆண்டாங்கோயில் அக்கிரகாரத்தில் இவ்வருடம் மத்வநவமி மகோற்சவம் அஷ்டமி நவமி தசமி மூன்று நாட்களும் மகாஜனங்களால் வெகு சிறப்பாய் கொண்டாடப்பட்ட தென்றும் அஷ்டமி சோமவாரத்தன்று ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு காலையில் பல்லக்கு உற்சவமும் மத்தியானம் பிராம்மணசந்தர்பணையும் இரவில் குதிரை வாகனமும், மத்வநவமி மங்களவாரத்தன்று காலையில் ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு ரதோத்ஸவமும் மத்தியானம் சுமார் 1000 ஜனங்களுக்கு பேணிபக்ஷணங்களுடன் விசேஷமான பிராம்மணபோஜனமும் இரவில் ஹரிதாஸ்பஜனையும் உத்தராராதனம் புதவாரத்தன்று காலையில் ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு பல்லக்கும் மத்யானம் பிராம்மணசந்தர்பணையும் மாலை 4-மணிக்கு கரூர் பென்ஷன் தாசில்தார் ஸ்ரீமான் C. R. கிருஷ்ணராயரவர்களால் வாயு ஜீவோத்தமர் என்பதைப்பற்றி அரியதோர் உபன்யாஸமும் 6 மணிக்கு மைசூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீமான் சிக்குராமராயரவர்களால் தக்க பக்கமேளங்களுடன் சங்கீதகச்சேரியும் இரவில் ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு புஷ்பப்பல்லக்கும் நடைபெற்றனவென்றும் இச்சமயம் திருப்பதி ஸ்ரீமவே நாராயணதாஸர் விஜயம் செய்திருந்து பஜனை பிரஸங்கம் முதலியவைகளை ஆனந்தமாய் நடத்திவந்தது அவ்வூர் மகாஜனங்களின் அதிர்ஷ்டமே என்றும் அனைவரும் இவ்வுற்சவக்கொண்டாட்டத்தில் கலந்திருந்து ஸ்ரீஹரி குரு அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களானார்களென்றும் ஸ்ரீமான்களான புட்டி ராகவேந்திரராவ், புட்டி சேஷராவ், புட்டி ஸ்ரீனிவாஸராவ், புட்டி கிருஷ்ணய்யர் ஸ்ரீமவே கரூர் புட்டி ஜயதீர்த்தாசாரியார் இவர்கள் அறிவித்திருக்கின்றனர்.

உத்தராதி ஸ்வாமிகள் ஸ்ரீமத்வநவமி மகோற்சவத்தையும் அவர்களின் குருவின் மகா சமாராதனை மகோற்சவத்தையும் வழக்கப்படி வெகு விரிவாய் இவ்வருடம் ராஜமகேந்திரத்தில் கோதாவரி தீரத்தில் அவருடைய குருவின் பிருந்தாவன ஸன்னிதானத்தில் நடத்தினரென்றும் வழக்கப்படி வித்வத் சம்பாவனை பூரிதக்ஷிணை வித்வத்சபை பிராம்மண சந்தர்ப்பணை முதலியவை நடந்ததென்றும் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனரென்றும் ஆந்திரதேசசஞ்சாரம் முடித்துக்கொண்டு இரண்டாம்முறை காசியாத்திரை செல்லப்போவதாய் பலமான வதந்தி இருக்கிறதென்றும் ஓர் நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தார் மந்திராலயம் சேர்ந்துவிட்டாரென்றும் இனி வெளிசஞ்சாரமில்லாமல் அங்கேதான் சில வருடங்கள் தங்கப்போவதாயும் தெரியவருகிறது. ஸ்ரீவியாஸராஜமடத்து ஸ்வாமிகள் சீக்கிரமே ஹைதராபாத்து பிராந்தியத்திற்குச் செல்ல பிரயாணம் சித்தம் செய்து வருவதாகவும் குந்தாபுரம் வியாஸராஜமடத்து ஸ்வாமிகள் தங்கள் சீடர்களுக்கு கொடுத்த முத்திராதாரணங்களை விசாரித்து சிஷ்யகோடிகளுக்கு ஆறுதலளிக்கப்போவதாயும் சொல்லப்படுகிறது.

மாத்வமித்திரன் ஆசிரியரால் தமிழில் எழுதப்பட்டு திருப்பதி மத்வஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையாரால் வெளியிடப்பட்டு வரும் ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகளின் ஸ்ரீகீதாதத்வத்தின் வேலை மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறதென்றும் வெகு மனோகரமாயும் சாஸ்திரார்த்தங்கள் நிறைந்ததுமான “ஜீவப்ரம்ம அபேதர்தான்” என்ற மூன்றும் சஞ்சிகை அநேகமாய் மார்ச்சு மாதக்கடைசியில் அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

## ஓர் சம்பாஷணை.

நான் சென்றவாரத்தில் சென்னைக்குப்போயிருந்த சமயம் காந்தி கட்சியைச்சேர்ந்த ஓர் மாத்வவாலிபனுக்கும் எனக்கும் அடியிற்கண்டபடி சம்பாஷணை நடந்தது. அது எல்லோருக்கும் ருசிகரமாயிருக்குமாதலால் அதை தங்கள் மித்திரன் வாசகர்களுக்கு அறிவிக்க துணிந்தேன்.

நான்:— இந்த இரட்டை வாழைப்பழத்தை பார்த்தாயா? பகவத் சிருஷ்டியின் அற்புதமென்ன?



வாலிபன்:— இது இயற்கை. கடவுள் சிருஷ்டியாம். கடவுளே இல்லை.

நான்:— கடவுள் உண்டென்று எமது வேதசாஸ்திரங்கள் கூறுகின்றனவே.

வாலிபன்:— உங்கள் சாஸ்திரங்களெல்லாம் பொய்.

நான்:— சாஸ்திரங்கள் பொய்யானால் அதன்படி என் பிரத்யக்ஷமாய் நடக்கிறது. விஷ ஜந்துக்கள் கடித்தால் மந்திரித்தவுடன் விஷம் நீங்குகிறது. ஆகவே மந்திரசாஸ்திரம் உண்மை. வைத்திய சாஸ்திரத்தின்படி மருந்து கொடுத்தால் வியாதி குணமடைகிறது. ஆகவே வைத்திய சாஸ்திரம் உண்மை. ஜோதிஷ சாஸ்திரத்தின்படி சூரிய சந்திரர்கள் உதித்து க்ரஹணாதிகள் நடக்கின்றன: ஆகவே ஜோதிஷ சாஸ்திரம் உண்மை. ராமாயணம் வாசித்தால் புத்ரஸந்தானமும் ஸுந்தரகாண்டத்தால் மனோபீஷ்டசித்தியுமுண்டாகிறது. இவ்வாறு பல பிரத்யக்ஷ அனுபவங்களால் எமது சாஸ்திரங்கள் உண்மை. அவைகளில் கடவுளிருக்கிறாரென்று சொல்லப்பட்டிருப்பதால் கடவுளிருப்பதாக எண்ணவேண்டும்.

வாலி:— கடவுளால் என்னசெய்யமுடியும்?

நான்:— எதுதான் முடியாது?

வாலி:— பணக்காரனாக்க முடியுமா?

நான்:— குசேலர் சாக்ஷி.

வாலி — ஆபத்தை தீர்க்கமுடியுமா?

நான்:— துரௌபதி சாக்ஷி. ப்ரஹ்லாதன் நன்கு அறிவான்.

வாலி:— கடனைத்தீர்க்க முடியுமா?

நான்:— ராமதாஸ் கதையைக்கேள்.

வாலி:— ஜாதிப்ரஷ்டமென்று தள்ளிவிடமாட்டாரா?

நான்:— அஜாமிளன் கதையைக்கேட்டதில்லையோ?

வாலி:— அப்படியானால் என்னைப்போன்றவர்களையும் சேர்த்துக்கொள்வாரென்கிறீர்.

நான்:— உண்மையாய் அவரிடம் பக்தி செய்தால் சேர்த்துக்கொள்வார்தான். கஜேந்திரன், சுக்ரீவன் முதலிய மிருகஜாதிகளையுமே சேர்த்துக்கொண்டிருக்கிறபொழுது உனக்கென்ன பயம்.

வாலி:— இனி நாஸ்திக்ய புத்தியை ஒழித்தேன். நாஸ்திக வாதம் பேசுகிறவர்களை திருப்புகிறேன்.

நான்:— நீயறிந்த தமிழ் பாஷையிலேயே வசனங்களைச் சொல்லுகிறே (1) தெய்வமிகழேல். (2) கடவுளை நம்பினோர் கைவிடப்படார். ஆலயந்தொழுவது சாலவுநன்று. (4) அவனன்றி ஓர் அணுவும் அசையாது. (5) கடவுளை வணங்கு. (6) வையந்தோரும் தெய்வந்தொழு (7, தெய்வம் சீறின் ஆரும் துணையில்லை. (8) குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில். (9) கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம். இவைகளினாலும் கடவுள் உண்டு என்பது வெளியாகிறது.

வாலி:— மிகவும் வந்தனம். என் புத்தி பூராவாய் மாறிவிட்டது.

V. குப்பாசாரியார்,
உமையாபுரம்.

[நம்மவர்களிலேயே நானே ஸ்வாமி என்று பறைசாற்றிக்கொள்ளும் கடையர்களும் அவர்களைக்கொண்டாடிச் சூழ்ந்திருக்கும் ஒரு சிறு கூட்டமும் பகிரங்கமாய் இருந்துவரும்பொழுது நாஸ்திகவாதம் செய்து நற்புத்தியடைய பெற்ற இவ்வாலிபன் பதின்மடங்கு உத்தமனென்றே நாம் சொல்லத்துணிவோம். ப-ர்.]

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 3-3-32. | குருவாரம் | ஏகாதசி, |
| 4-3-32. | சுக்கிரவாரம் | த்வாதசி, சிரவணஉபவாஸமில்லை. விஷ்ணு பஞ்சக உபவாஸமில்லை. |
| 7-3-32. | சோமவாரம் | அமாவாசை அசுவத்த பிரதக்ஷிணம், விஷ்ணு பஞ்சக உபவாஸமுண்டு. |
| 18-3-32, | சுக்கிரவாரம் | ஏகாதசி. |
| 22-3-32. | மங்களவாரம் | பௌர்ணமி, போளிப்பண்டிகை, மன்மததகனம், விஷ்ணுபஞ்சக உபவாஸம் உண்டு. சந்திர கிரஹணம், மாலை 4-29 மணிக்கு ஸ்பரிசம், இரவு 7-35க்கு மோக்ஷம். பகலில் போஜனம் கூடாது. கிரஹணம் விட்டபின் தான் போஜனம் செய்யவேண்டும். |

208690


### மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை!!

### சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

### அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் 0—4 0
சக்குபாய் ஷை. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

### கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
| --- | --- |
| வாஸனைப்பாக்கு | பலகாய்கரிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள். |

ச ந் த னா தி த் தை ல ம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkateswar Printing works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.